# அருட்பணியாளர் செபமாலை தூரம் அவர்களின்
# குருத்துவத் திருப்பணி வெள்ளிவிழா

**«எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள். இடைவிடாது செபியுங்கள். என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காகக் கிறீஸ்து யேசுவில் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே.»**

**(தெசலோனியர் 5 : 16-18)**

2008 ஆவணி 22ம் திகதி தனது குருத்துவப்பணி வாழ்வின் வெள்ளிவிழாவினை நிறைவு செய்த அருட்தந்தை செபமாலை தூரம் அவர்கள், பிரான்ஸ் வாழ் புலம்பெயர் தமிழ்க் கத்தோலிக்கர் மனதில் ஆழப்பதித்த இத்திருவசனங்கள் விசுவாச வாழ்விற்கு வித்தானவை.

பிரான்ஸ் கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் வேண்டுகோளின் பயனாக, அ.ம.தி. சபைக் குருக்கள் பிரான்ஸ் நாட்டில், இலங்கைத் தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கு ஆன்மீகப்பணி புரிய உத்தியோக பூர்வமான உரிமை கிடைத்தது. இவ்வகையில், அருட்தந்தை அவர்கள் 1993 பங்குனி மாதம் இப்பணியினைத் தொடக்கி வைத்தார். அருட்சகோதரி அன்ரநீற்றா அவர்களின் வழிநடத்துதலின் கீழிருந்த அருட்பணியாளர்களின் சேவை நிர்வாகம், அவரது வருகையுடன் இலங்கைத் தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கான ஆன்மீகப் பணியக இயக்குனரின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

பல்வேறுபட்ட எதிர்ப்புக்களையும், இன்னல்களையும் இறை வல்லமையால் தாங்கி, மக்களின் ஆன்மீக வழிகாட்டலின் பாதையைச் செம்மையாக்கி, இன்றைய எமது ஆன்மீகப் பணியக நிர்வாகத்திற்குத் திடமான அத்திவாரம் இட்டமை, அவரது பணியின் சிறப்பாகும்.

எமது நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து புலம் பெயர்ந்து, மேலைநாட்டுக் கலாச்சாரங்களின் தாக்கத்தினால் பல்வேறு மனநிலைகளைக் கொண்ட மக்களின் மத்தியில் ஒரே குடும்ப உறவினை வளர்க்க, அனைத்துத் தரப்பிலுமிருந்தும் மக்கள் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து 30.10.1994-ல் பிரான்ஸ் வாழ் இலங்கைத் தமிழ்க் கத்தோலிக்கரின் ஆன்மீக நலன்புரிச்சபையை உருவாக்கி, ஆன்மீகத் திட்டமிடலுடன் அவர் ஆற்றிய அரும் பணி, அவரது 25 வருடக் குருத்துவப்பணி வாழ்வில் மிகவும் முக்கியமானது

மக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றவும், இறை-மனித உறவுகள் ஆழமாகி உண்மையான மகிழ்ச்சி மலரவும் «உறவுகள் மலரட்டும்» என்ற முதலாவது உறவு மலர் 25.12.1994-ல் வெளியாகியது. திருப்பலி வழிபாடுகள் கொங்கூட் புனித சூசையப்பர் ஆலயத்திலிருந்து தமிழ்க் கத்தோலிக்கர் செறிந்து வாழும் பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டது. திருப்பலிப் பாடற்புத்தகம் ('இறைவனைப் புகழ்வோம்') வெளியிடப்பட்டு இசையால் இறைவனைப் புகழ வழி வகுக்கப்பட்டது. புனிதர்களின் திருவிழாக்கள் தனிப்பட்ட ஊர்த்திருவிழாவாக அன்றி, புனிதர்களைப்

பாதுகாவலராகக் கொண்ட அனைவரும் இணைந்து கொண்டாடும் பொதுத் திருவிழாவாக நடைமுறைப் படுத்தப்பட்டது.

திருவருட்சாதனங்களை முறையாகப் பெற்று, இறையருள் உறவினால் உள்ளம் தூய்மையாகி வாழ்வில் மகிழ்ச்சி பொங்க வழி காட்டினார். சிறுவர் மறைக்கல்வி நூலைத் தானே எழுதி வழங்கியும், மறைக்கல்வி வகுப்புகளின் மூலமும், தகுந்த ஆயத்தங்களுடன் 28.08.1994-ல் முதன் முறையாக பத்தொன்பது பிள்ளைகளுக்கு தமிழ் மொழியில் முதல் நன்மைத் திருவருட்சாதனம் அருளப்பட்டது. அவ்வாறே தூயஆவியின் வழி நடத்துதல், அருட்கொடைகள், அருங்கனிகள் பற்றிய விளக்க உரைகளை வழங்கி, மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்களால் தமிழ் மொழியில் முதன் முறையாக உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாதமொருமுறை குடும்பக் கருத்தரங்குகளும், வகுப்புக்களும் நடாத்தித் தகுந்த ஆயத்தங்கள், வழிநடத்தல்களுடன் திருமண அருட்சாதனத்தை வழங்கி, உண்மை அன்புறவு கொண்டதாக இல்லறம் இனிதே அமைய உதவினார். ‘செபமாலை வழியில் இறைவனிடம் செல்வோம்’ என்று அழைப்பு விடுத்த அருட்தந்தை அவர்கள் குடும்பப் பெண்கள் மரியன்னை வழியில் வாழ்க்கையை அமைக்க வேண்டுமென்ற நோக்குடன் 10.05.1995-ல் ‘மாதா கூட்டத்தை’ உருவாக்கினார்.

வளர்ந்து வரும் இளைஞர்கள், இளம் பெண்களை நல்வழிப்படுத்த பிரான்ஸ் நாட்டவரும், அமலமரித் தியாகிகள் சபையின் ஸ்தாபகருமான ‘புனித யூஜின் டி மெசனட் இளைஞர் மன்றத்தை’ உருவாக்கி, ஒன்றுகூடல்கள், கருத்தரங்குகள், கலைவிழாக்கள் மூலம் அவர்கள் தம்மை அறிந்து கொள்ளும் உளவளர்ச்சியினால் எதிர்கால வாழ்க்கையைச் சிறப்பாக அமைக்க நல் வழிகாட்டியானார்.

புலம் பெயர்ந்த மக்களின் ஆன்மீக வழிப்பயணத்தில் அடிகளார் மேற்கொண்ட பத்தி நிறைந்த திருயாத்திரைகள் முக்கியமானவை. புல வருடங்களாக, பிரான்ஸ் நாட்டு மக்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சார்ட் திருத்தலத் திருயாத்திரையில் பிரெஞ்சு மொழியிலேயே திருவழிபாட்டு நிகழ்வுகள் இடம் பெற்றன. அருட்தந்தை அவர்கள் பேராலயப் பங்குத்தந்தை, நகரசபை முதல்வர், பொலீஸ் மா அதிபர், மற்றும் பொறுப்பான அனைத்து நிர்வாகிகளுடனும் மேற்கொண்ட ஒன்றுகூடல்கள் முயற்சிகளினால், 19.06.1994-ல் முதல் முறையாக 5000 தமிழ் மக்கள் இணைந்து, தமிழில் திருவழிபாட்டு நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த திருயாத்திரையாக அனைவரையும் கவர்ந்தது. 1995-லிருந்து சார்ட் திருத்தலயாத்திரை, ஆன்மீக இயக்குனரின் கட்டுப்பாட்டின் கீழ், திட்டமிட்ட ஒழுங்கமைப்பான நிகழ்வாக அமைந்தது.

ஆரம்பத்திலிருந்தே இந்த நிர்வாக ஒன்றுகூடல்களில் பங்குபற்றி வரும் பணிச்சபை உறுப்பினர் அன்றூ ஜோர்ஜ் அவர்கள் இவ்வருடம் சார்ட் திருத்தலயாத்திரை, 15 வருட இறையனுபவம் மிக்க நிறைவு விழாவைக் கொண்டாடுவதாகக் கூறி மகிழ்கின்றார்.

மேலும், 1995 ஆவணி முதல் வாரத்தில் அடிகளார் மேற்கொண்ட லூர்து அன்னை திருத்தல யாத்திரை, 27.08.1995-ல் லிஸ்சியூ(Lisieu) புனித திரேசம்மா திருத்தல யாத்திரை, 21.01.1996-ல் புனிதபூமி இஸ்ராயேல் நாட்டுக்கான திருயாத்திரை, 15.07.1997-ல் போர்த்துக்கல் நாட்டுப் புனித பத்திமா அன்னை திருத்தலயாத்திரை ஆகியவை, தொடர்ந்து பணியாற்றும் எமது ஆன்மீக இயக்குனர்களும் மக்களும் பங்குபற்றிப் பயன் பெற வழியமைத்தன.

21.04.2007-ல் பிரான்ஸ் நாட்டில், saint Martin d'Orly-Choisy தேவாலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட அருட்பணியாளர் றொபேட் அந்தோனிப்பிள்ளை அவர்களுக்குக் குருத்துவ அழைப்பின் வழிகாட்டியாயிருந்து நெறிப்படுத்தியமை புலம்பெயர் நாட்டில் அவர் ஆற்றிய பணிக்கு மெருகூட்டுவதாகும்.

ஏழைகள் மீது அளவற்ற இரக்கமும், இளகிய மனமும் கொண்ட அருட்தந்தை அவர்கள் பிரான்ஸ் நாட்டில் தனது பணிவாழ்வை நிறைவு செய்த பின், 1999-2001 வரை இந்தியாவில் தமிழ் நாட்டில் அகதி முகாம்களில் வாழ்ந்த மன்னார் மக்கள் மத்தியில் பணியாற்றினார். தொடர்ந்து, பதுளை மாவட்டம் பாதினாவெல பங்கில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் மத்தியில் தொண்டு புரிந்து வருகின்றார்.

ஆண்டவனின் அருளால் குருத்துவப் பணிவாழ்வின் நிறைவில் வெள்ளிவிழாக் காணும் அருட்தந்தை செபமாலை துரம் அவர்களை, பிரான்ஸ் இலங்கைத் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகம் அக மகிழ்வோடு வாழ்த்தி இறைவனுக்கு நன்றி சொல்வதுடன், அவரது நற்செய்திப்பணி மேலும் சிறக்க இறையருள் வேண்டி நிற்கின்றது.

**« ஆண்டவரில் என்றும் அகமகிழ்வோம் - நாம்**

**எல்லா வேளையும் நன்றி சொல்வோம் »**